# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம் 21-08-2025 வியாழக்கிழமை மாலை** 3.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் தலைமை தபால் நிலையம் முன்புறம் காலியாக உள்ள இடத்தில் பொதுமக்கள் பொழுதுபோக்கும் வகையில் Sitting Bench அமைப்பதற்கும் ஏற்கனவே உள்ள பக்கசுவரில் Stainless Handrail அமைப்பதற்கும் இந்நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியின் போது அதிக மக்கள் வரும் இடமாக இருப்பதால் அதனை அழகுபடுத்தும் நோக்கில் பணி மேற்கொள்ள வார்டு உறுப்பினர்கள் மனுவின்படியும் நகர்மன்றத்தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளரின் அறிவுரைப்படியும் மதிப்பீடு ரூ.9,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2565/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1432 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் குழித்துறையில் குலசேகரம் செல்லும் பாதையில் பஸ் நிறுத்தும் இடத்தில் சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளதாலும் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி இருப்பதாலும், பொதுமக்களுக்கு சிரமமாக உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,30,000/- (இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**

மன்றத்தீர்மான எண்.1433 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.13-ல் குடிநீர் இணைப்பு வழங்கிட கேட்டு உண்ணாமலைக்கடை பேரூராட்சிக்குட்பட்ட 1-வது வார்டு பகுதியில் பேரூராட்சியிலிருந்து பைப்லைன் செல்லாத காரணத்தால் குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால் பின்வரும் கதவு எண்கள் கொண்ட வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கிட கேட்டு பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தீர்மான எண்.715 நாள் 30-05-2025)
கதவு எண்கள்: 1/115/st-8, 1-1E, 1-1/5, 1/1A1B, 1-4B, 1/1/2, 1-1D1, 1-1D2, 1-1B3, 1-1B/4, 1-1B/1, 1-1/1A, 1-1/1B2, 1/4C. நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1805/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1434 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு பயன்பாட்டிற்கு தேவையான தூய்மை பணியாளர்களுக்கு மழைசட்டை வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.1352, நாள் 26-06-2025 ஒப்புதல் அளிக்கப்பட்டதின் பேரில் மழை சட்டை வாங்கி வழங்கிட 11-07-2025-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | பொருள் | தொகை |
|---|---|---|---|
| 1 | R.M. SATHASZVAN PILLAI | மழை சட்டை | 1050 x 37 = 38850 |
| 2 | CHANDRIKA TEXTILE | ” | 1150 x 37 = 42550 |
| 3 | RAMANAN TEXTILES | ” | 1100 x 37 = 40700 |

எனவே பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் வரிசை எண்.1-ல் R.M. SATHASZVAN PILLAI என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3655/2021/எச்1.

மன்றத்தீர்மான எண்.1435 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான விளவங்கோடு வில்லேஜ் அலுவலகம் படிப்பகம் அருகாமையில் உள்ள புல எண்.அ6/98-1-ல் நிற்கும் புளியமரத்தினை முறித்து எடுத்து அப்புறப்படுத்துதுல் மற்றும் 10 மரக்கன்றுகள் நடவு செய்தல் பணிக்கு 14-08-2025 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | V.S. ஸ்ரீகுமார் | 9200 | வழங்கவில்லை |
| 2 | C. விஜயன் | 9000 | வழங்கவில்லை |
| 3 | R. ராமதாஸ் | 8800 | வழங்கவில்லை |
| 4 | T. சத்துருக்கனன் | கலந்து கொள்ளவில்லை | 12100/- |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் உள்ள கூடுதல் தொகை ரூ.12100/- கோரியுள்ள திரு.T. சத்துருக்கனன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2815/2025/அ2

மன்றத்தீர்மான எண்.1436 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 13-வது வார்டில் தேவன்விளை கான்வென்ட் எதிர்புறம் செல்லும் சாலையில் உள்ள கிராம புல எண்.D1/175-ல் நீற்கும் இலவு மரத்தை முறித்து எடுத்து செல்லுதல் மற்றும் 10 மரக்கன்றுகள் நடவு செய்தல் பணிக்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 14-08-2025 நடைபெற்றதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு. வினிஷ், கண்ணக்கோடு | 350/- |
| 2 | விஜயன், கண்ணக்கோடு | 250/- |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் தொகை தெரிவித்துள்ள திரு. வினிஷ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளது. எனவே திரு. வினிஷ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2254/2025/அ1

மன்றத்தீர்மான எண்.1437 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு நகராட்சியின் சார்பாக வழங்கப்படும் சேவைகள் வரிவிதிப்பு, கட்டிட வரைபடம், குடிநீர் வினியோகம், குழாய் உடைப்புகள், பொது சுகாதாரம், தெருவிளக்கு, சாலைகள் மற்றும் அன்றாட அடிப்படை தேவைகளின் குறைபாடுகளை நிவர்த்திட (whatsapp) தொடர் எண்.**7598027123** மூலம் குறுஞ்செய்தியோ அலைபேசி மூலமாகவும் தெரிவித்திட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தினசரி நாளிதழி தினமலர்-யில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பில் தொகை பட்டியல் தொகை ரூ.5670/- வரப்பெற்றது. மேற்படி தொகையினை தினசரி நாளிதழ் தினமலர் நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனும=தி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1438 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்திலுள்ள பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, பொதுசுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிலுள்ள உபயோகமாற்ற பழைய பொருட்கள் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3194/2023/இ1.
மன்றத்தீர்மான எண்.1439 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தை KNMT 2023-24 திட்டத்தின்கீழ் ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. தற்போது கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் (Pre-Auction) முன் கூட்டி ஏலம் விடுவதற்கு கீழ்கண்டவாறு உள்ள கடைகளுக்கு வைப்புத்தொகை நிர்ணயம் செய்து Pre-Auction விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**காய்கறி சந்தை கடைகள்**

| வ. எண் | கடை எண் | வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | 1 முதல் 13 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ( முன்பக்கம் கடையின் அளவுகள் 145 ச.அ. முதல் 168 ச.அ. ) | 3,00,000 |
| 2 | 14 முதல் 15 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ( முன்பக்கம் கடையின் அளவு 255 ச.அ.) | 3,50,000 |
| 3 | 16 முதல் 35 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ( முன்பக்கம் கடையின் அளவுகள் 113 ச.அ. முதல் 161 ச.அ. ) | 3,00,000 |
| 4 | 36 மட்டும் உணவகம் (உள்பக்கம் கடையின் அளவு 356 ச.அ.) | 3,50,000 |
| 5 | 37 முதல் 51 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக (உள்பக்கம் கடையின் அளவு 113 ச.அ.) | 2,00,000 |
| 6 | 52 முதல் 56 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக (உள்பக்கம் கடையின் அளவு 95 ச.அ. ) | 2,00,000 |
| 7 | 57 மட்டும் உணவகம் (உள்பக்கம் கடையின் அளவு 356 ச.அ.) | 3,00,000 |
| 8 | 58 முதல் 63 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக (உள்பக்கம் கடையின் அளவு 113 ச.அ.) (இறச்சி கடைகள்) | 2,50,000 |
| 9 | 64 மட்டும் இறைச்சிகடை (உள்பக்கம் கடையின் அளவு 263 ச.அ.) | 3,00,000 |
| 10 | 65 முதல் 72 வரையுள்ள கடைகள் மாற்று திறனாளிக்கு ஒதுக்கீடு (உள்பக்கம் கடையின் அளவு 113 ச.அ.) | 2,00,000 |

| | | |
|---|---|---|
| 11 | 73 முதல் 81 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக (உள்பக்கம் கடையின் அளவு 113 ச.அ.) | 2,00,000 |
| 12 | 82 முதல் 85 வரையுள்ள கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக (உள்பக்கம் கடையின் அளவுகள் 87 ச.அ. முதல் 113 ச.அ. ) | 2,00,000 |

**கவுண்டர் கடைகள்**

| வ. எண் | கடை எண் | வைப்புத்தொகை |
|---|---|---|
| 1 | C-1 முதல் C-81 வரையுள்ள கடை (உள்பக்கம் கடையின் அளவுகள் 95 ச.அ. முதல் 120 ச.அ. | 56,00,000 |

**மால்கள்**

| வ. எண் | கடை எண் | வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | F1 (முதல் தளம் கடையின் அளவு 2690 ச.அ. ) | 5,00,000 |
| 2 | F2 (முதல் தளம் கடையின் அளவு 1920 ச.அ. ) | 3,00,000 |
| 3 | F3 (முதல் தளம் கடையின் அளவு 1993 ச.அ. ) | 3,00,000 |
| 4 | F4 (முதல் தளம் கடையின் அளவு 988 ச.அ. ) | 2,00,000 |
| 5 | நுழைவு கட்டணம் | 2,00,000 |

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2631/2025/அ2

மன்றத்தீர்மான எண்.1440 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி..